**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**P.W.1**

**MCOP No. 87/2021**

**Name** : செங்கோட்டுவேலு
**Father's Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 23.01.2025.**

**ம.சா.1 முதல் விசாரணை:-**

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இம்மனுவின் மனுதாரர்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 17.02.2021 | முதல் தகவல் அறிக்கை | ஒளிநகல் |
| ம.சா.ஆ.2 | 17.02.2021 | ஆத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காய சான்றிதழ் | ஒளிநகல் |
| ம.சா.ஆ.3 | 18.02.2021 | சம்பவ இடத்தின் மாதிரி வரைப்படம் | ஒளிநகல் |
| ம.சா.ஆ.4 | 19.02.2021 | ஆத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி | ஒளிநகல் |
| ம.சா.ஆ.5 | 04.05.2020 | TN30BM4444 பாலிசி காப்பி | ஒளிநகல் |
| ம.சா.ஆ.6 | 04.03.2021 | TN30BM4444 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை | ஒளிநகல் |
| ம.சா.ஆ.7 | 01.03.2021 | TN77J8428 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை | ஒளிநகல் |
| ம.சா.ஆ.8 | 30.04.2022 | இறுதி அறிக்கை | ஒளிநகல் |
| ம.சா.ஆ.9 | -- | ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.10 | 01.12.2020 | TN77J8428 வாகனத்தின் இன்சுரன்ஸ் பாலிசி | ஒளிநகல் |
| ம.சா.ஆ.11 | -- | ஓட்டுநர் உரிமம் | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு |

ஆக குறியீடுசெய்யப்படுகின்றன. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) நான் காரை எவ்வளவு தூரத்தில் 10 அடி தூரத்தில் பார்த்தேன். ஏன் பார்க்கமுடியவில்லை என்றால் அந்த இடம் வலைவான இடம், பாலத்திற்கு அருகில் இருந்தது. இந்த விபத்து குறித்து புகார் கொடுத்தது நான் தான். புகார் கொடுக்கும் போது காரை ஓட்டிய நபர் பெயர் சரவணன் த/பெ. ராஜீ என்பது எனக்கு தெரியும். அவர் ஏற்கனவே ஒரு விபத்து ஏற்படுத்திவிட்டு எங்கள் மீது மோதி அதற்கு பின்னால் ஒரு விபத்து ஏற்பட்தியுள்ளார். நான் ஓட்டிவந்த இரு சக்கர வாகனத்தின் மீதி மோது போது சுமார் இரவு 8 மணி இருக்கும்.

2) விபத்தை ஏற்படுத்திவிட்டு வண்டியை நிறுத்தாமல் சென்று விட்டார். நான் விசாரித்த வகையில் காரின் ஓட்டுநர் போதையில் இருந்ததாக தெரியவந்தது. அவர் தாறுமாறாக கார் வந்ததை கவனித்துவிபத்தை தவிர்பதற்கு நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் சாலையின் இடது ஓரம் வாகனத்தை ஓட்டிவந்தேன் அதற்கு இடது பக்கம் ஒரு பள்ளம் இருந்தால் அதற்கு மேல் செல்ல முடியவில்லை. விபத்திற்கு நானும் ஒரு காரணம் என்று சொன்னால் சரியல்ல.

3) காரின் ஓட்டுநர் போதையில் இருந்ததாலும், நானும் ஒரு காரணம் என்பதாலும், விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எவ்வித உடல் ஊனமும், வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

4) நான் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனம் இப்கோ டோக்கியோ இன்சுரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டது. எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருக்கிறது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு இழப்பீடு வழங்க 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் கடமைப்பட்டவர்கள் என்றும், 4ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் தான் காரணம்.

5) இந்த விபத்திற்கான நஷ்டயீட்டை 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் தரவேண்டும் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் 1ம் எதிர்மனுதாரரை பொருத்து குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Accidents Claim Tribunal,**
**Attur.**